**Published on 14, Jan-2025** **ISSN: 3049-2688 (Online)**

# அறிமுக நோக்கில் ஆறுமுக நாவலரின் நன்னூல் காண்டிகையுரை மீது சில கருத்துகள்

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

முனைவர் பா. மதுகேஸ்வரன்
பேராசிரியர்
பல்கலைக்கழக நூல் வெளியீட்டுப் பிரிவு, தொலைநிலைக் கல்வி இயக்ககம்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்,
சென்னை 600 051

தமிழ்ப் பதிப்புலகில் குறிப்பிடத் தக்க அறிஞர் பெருமக்களுள் யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலரும் ஒருவர். இவரின் பதிப்புகள் காலத்தைக் கடந்து நிற்பவை. இவை பதிப்பு என்பதன் பொருளை உணர்ந்து செய்யப்பட்டவை. பதிப்பாசிரியரின் அறிவுப் பின்னணியையும் அவர்க்கான பணியையும் இவற்றின் வழிக் கண்டுணர முடியும். இவ்வளவு சிறப்பிற்குரிய நாவலரின் பதிப்புகளுள் முப்பதிற்கும் மேற்பட்ட மறுபதிப்புகளைக் கண்ட நன்னூல் காண்டிகையுரைப் பதிப்பு குறித்துச் சில கருத்துகளைப் பகிர்வதாக இக்கட்டுரை அமைகிறது.

நாவலரின் மறைவுக்குப் (1879) பின், அவரின் நன்னூல் காண்டிகையுரை 1880இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. நன்னூலுக்கு முதலில் வந்த விசாகப்பெருமாளையரின் நன்னூல் காண்டிகையுரை (1835), அடுத்து வந்த இராமநுச கவிராயரின் நன்னூல் விருத்தியுரை (1847) ஆகியவற்றோடு ஒப்பிட நாவலரின் காண்டிகையுரை வடிவமைப்பில் சிறந்ததாக உள்ளது. இதில் பொருள் தலைப்பு, நூற்பா, நூற்பாப் பொருள், உதாரணம், பரீட்சை வினாக்கள் என்ற அமைப்பில் நூற்பாவின் கருத்து விளக்கப் பெற்றுள்ளது. இவற்றில் பொருள் தலைப்பும், பரீட்சை வினாக்களும் நன்னூல் உரை மரபில் புதியவை; நாவலருக்குப் பின்னர் வந்த நன்னூல் உரையாசிரியர்களில் பெரும்பான்மையோர் இவ்விரண்டையும் தமது உரைகளில் எடுத்துப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர் என்பது இங்குக் குறிப்பிடத் தக்க செய்தி. கற்பித்தலுடன் நாவலருக்கு இருந்த தொடர்பே இவ்விரண்டும் இடம்பெறக் காரணமாகும்.

ஆசிரியர் கற்றுக்கொடுக்கும் முறையில் செய்யப்பட்ட நாவலரின் காண்டிகையுரைக்குப் பக்கபலமாக அதாவது மாணவர் கற்றதைச் சோதித்துப் பார்க்கும் வகையில் 'அப்பியாசம்' என்பது நூலின் பிற்சேர்க்கையாக இடம்பெற்றுள்ளது. பயிற்சி / பாடப்பயிற்சி என்பது அப்பியாசத்திற்கான பொருளாகும். இவ்வகையில் 60 அப்பியாசங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுக்குச் சான்றுக்கு, "மேல் வருந் தொடர்மொழிகளிலே கொல்லிடைச்சொல் எவ்வெப்பொருளில் வந்தது?" என்பதை இங்குக் காட்டலாம். நூலின் பிற்சேர்க்கையான அப்பியாசத்தோடு சேர்ந்து இலக்கணவமைதி, பகுபத முடிபு, சொல்லிலக்கண சூசி ஆகியவையும் நூலை அலங்கரிக்கின்றன.

"இலக்கணங் கற்றவர், இலக்கியத்தில் அவ்விலக்கணம் அமைந்து கிடக்குமுறைமையை ஆராய்ந்து விதியோடு கூறப் பயிலல் வேண்டும். அது செய்யப் பயிலாவிடத்து, இலக்கண நூற் கல்வியால் ஒரு பயனும் இல்லை" என்பது இலக்கணவமைதிக்குத் தரப்பட்ட பொருளாகும். இதோடு "வாக்கியத்திலாயினுஞ் செய்யுளிலாயினும் இலக்கணவமைதி கூறுதல் ஆறு வகைப்படும்" என அது சொல்லப்பட வேண்டிய இடங்களும் வகையும் தெளிவு பெற்றுள்ளன. அறு வகையில் இலக்கணவமைதி அமையும் பாங்கு "1. பதங்களைப் பிரித்து, இது பகாப்பதம் இது பகுபதம் என வகுத்துப், பகுதி முதலிய உறுப்புக்களான் முடிந்தமை கூறுதல், 2. பதங்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்கும் நிலையை நோக்கி, இது வேற்றுமை வழியில் இன்னதொடர், இது அல்வழியில் இன்னதொடர் எனக் கூறுதல், 3. பதத்தோடு பதமும் பதத்தோடு உருபும் புணர்ந்து நின்ற முறைமையைச் சூத்திர விதியோடும் எடுத்துக்கூறுதல், 4. ஒவ்வொரு சொற்கும் இலக்கணமும் முடிக் கும் சொல்லும் கூறுதல், 5. முக்கியமாகிய எழுவாயையும், பயனிலையையும், செயப்படு பொருள்

உண்டாயின் அதனையும், எடுத்துக் காட்டி, அதனை விசேடித்து நிற்கும் விசேட ணத்தை விளக்குதல், 6. முக்கியமாகிய பயனி லையை எடுத்துக்கூறி, அதனைத் தொடர்ந்து வரும் பதங்கள் ஒன்றையொன்று அவாவி நிற்கும் நிலையை வினாவிடைகளான் இனிது விளக்குதல்" என விளக்கிக் காட்டப் பெறுகிறது. இன்றைய சூழலில், இந்த அறு வகை முறைமையிலான இலக்கணவமைதி யையும் விளங்கிக்கொள்வதனால் தமிழின் சொல் இலக்கணத்தைக் கற்றுக்கொள்வதற் கும், கற்பிப்பதற்குமான துணைக் கருவியே இவை எனலாம்.

இது வரையில் நாவலரின் நன்னூல் காண்டி கையுரை அமைப்பையும், அதற்குத் துணையான வற்றையும் ஒருவாறு விளக்கி னோம். இனி, காண்டிகையுரை வரைவதற்கு நாவலருக்கு மூலாதாரமாக இருந்தவை பற்றிக் காண்போம்.

நாவலரின் காண்டிகையுரைக்கு மூலம் 'சங்கர நமச்சிவாயர் செய்து சிவஞான முனிவர் திருத்திய புத்தம் புத்துரை என்னும் விருத்தியுரை' என்பது இதுகாறும் இது குறித்து ஆராய்ந்தோரின் கருத்தாக உள்ளது. இது முற்றிலும் உண்மை அல்ல. சங்கர நமச்சிவாயர் உரையைத் தழுவி நாவலரின் காண்டிகையுரை மிக எளிமையாகச் செய்யப் பட்டிருந்தாலும் அதில் ஆங்காங்கே இராமாநுச கவிராயரின் விருத்தியுரைக் கருத்துகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதுதான் உண்மை. இதற்குச் சான்றாக, நன்னூல் பதவியல் 14ஆம் நூற்பாவான "இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலிற்." என்பதன் உரையின் பிற்பகுதியான உதாரணப் பகுதியைக் கீழே காட்டலாம்:

*உ-ம். அறிஞன், வினைஞன், கவிஞன் என்பன ஞகரவிடைநிலை பெற்றன. ஓதுவான், பாடுவான் என்பன வகரவிடை நிலை பெற்றன. இடைச்சி, வலைச்சி, புலைச்சி என்பன சகரவிடைநிலை பெற்றன. வண்ணாத்தி, பாணத்தி, மலையாட்டி, வெள்ளாட்டி என்பன தகரவிடைநிலை பெற்றன. செட்டிச்சி, தச்சிச்சி என்பன இச்சிடைநிலை பெற்றன.* ***(ஆறுமுக நாவலரின் காண்டிகையுரை)***

இப்பகுதியைக் கீழ்க்காணும் சங்கர நமச்சிவாயர் உரைப் பகுதி, இராமாநுச கவிராயர் உரைப் பகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நாவலர் எந்த அளவிற்கு இவ்விரு உரைப் பகுதிகளையும் எடுத்துக் கொண்டு தமது உரையைச் செய்துள்ளார் என்பது புலப்படுகிறது.

*உ-ம்: அறிஞன் என்பது ஞகர இடைநிலை பெற்றது. ஓதுவான், பாடுவான் என்பன வகர இடைநிலை பெற்றன. வலைச்சி, புலைச்சி என்பன சகர இடைநிலை பெற்றன. வண்ணாத்தி, பாணத்தி, மலையாட்டி, வெள்ளாட்டி, தந்தை, எந்தை, நுந்தை என்பன தகர இடைநிலை பெற்றன. பிறவும் அன்ன.* ***(சங்கர நமச்சிவாயர் செய்து சிவஞான முனிவர் திருத்திய புத்தம் புத்துரை என்னும் விருத்தியுரை)***

*[உ-ம்,] அறிஞன் – வினைஞன் - கவிஞன் - இவை ஞகரஒற்று இடைநிலை பெற்றன, ஓதுவான் -பாடுவான் - இவை வகரவொற்று இடைநிலை பெற்றன, வலைச்சி – இடைச்சி -இவற்றில் - சகரஒற்று இடைநிலை, - செட்டிச்சி -தச்சிச்சி – இச்சு இடைநிலை, கரியவன் - கதிரவன் –எல்லவன் - வல்லவன் – வானவன் – மீனவன் – அகர இடைநிலை, சேரமான்-கட்டிமான்-கோமான் -வடமன் – மகர இடைநிலை – பிறவுங்காண்க.* ***(இராமாநுச கவிராயரின் விருத்தியுரை)***

இதுபோல் நாவலரின் நன்னூல் காண்டிகை யுரைப் பகுதிகள் முழுமையும் மேற்குறித்த இருவர் உரைகளோடும் ஒப்ப வைத்து ஆராய்ந்தால், நாவலர் உரையின் பெரும் பகுதி சங்கர நமச்சிவாயர் உரையைத் தழுவியும், சிறுபகுதி இராமாநுச கவிராயர் உரையைச் சார்ந்திருப்பதும் தெளிவாகும்.

ஆக, இதன்வழி நாவலர் உரை, தழுவல் உரை என்ற முடிவுக்கு நாம் வருகிறோம். இதோடு, நாவலர் உரையில் இடம் பெற்றுள்ள பொருள் தலைப்பு, பரீட்சை வினாக்கள் ஆகிய இரண்டும் புதியவை என்பதையும் இங்குப் பதிவுசெய்கிறோம்.

**துணைநின்றவை**


- நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயருரையும், வே. சாமிநாதையர், கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை, 1925.
- பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் முகவை இராமானுசக் கவிராயர் விருத்தியுரையும், கா.ர. கோவிந்தராஜ முதலியார் குறிப்புரையுடன், இ.மா. கோபாலகிருஷ்ணக் கோனார் வெளியிட்டது, 1940.
- நன்னூற் காண்டிகையுரை, யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பதிப்பின் நிழற்படப் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், மே 1984.
- பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் புத்தம் புத்துரை என்னும் விருத்தியுரையும், பதிப்பாசிரியர்: அ. தாமோதரன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1999.